**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், போளூர், திருவண்ணாமலை மாவட்டம்**

2026 ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் 19 ஆம் நாள் திங்கட்கிழமை 1873 ம் ஆண்டு 11 வது ஏற்பாட்டின்படி திருமதி. க.இந்துமதி, கிரேடு III பெஞ்ச் கிளார்க் என்பவரால் ஆணையிட்டு உறுதி செய்யப்படுகிறது.

**OS.No. 537/2018** வா.சா. 2 என்பவரின் வாக்குமூலம்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **பெயர்** | : | சதாசிவம் | **வயது** | : | 53 |
| **த.பெ** | : | பெருமாள் சாமி | **தாலுக்கா** | : | போளூர் |
| **கிராமம்** | : | ஊத்தூர் | **தொழில்** | : | விவசாயம் |

**19.01.2026 – வா.சா. 2 குறுக்கு விசாரணை**

1)வாதி ராஜமாணிக்கம் எனக்கு பங்காளி என்றால் சரிதான். வாதி ராஜமாணிக்கம் எதற்காக வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்று தெரியுமா என்றால் தெரியும். வழக்கு சொத்தின் சர்வே நெம்பர் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். எவ்வளவு பரப்பளவு என்றால் 57 செண்ட் ஆகும். வழக்கு சொத்திற்கு சக்குபந்தி தெரியுமா என்றால் தெரியாது. என்னுடைய நிலத்திற்கும் வழக்கு சொத்து நிலத்திற்கும் 2 கி.மீ தூரம் இருக்கும் என்றால் சரிதான். நான் கடைசியாக வழக்கு சொத்தை எப்போது பார்வையிட்டேன் என்றால் நான் அவ்வபோது பார்த்துகொண்டே தான் உள்ளேன். வழக்கு சொத்தில் என்ன பயிர் உள்ளது பயிர் வைக்கவில்லை. தாவா சொத்தானது ஆதியில் வெங்கடாசல கவுண்டருக்கு பாத்தியாபட்டது என்றால் சரிதான். மேற்படி வெங்கடாசல கவுண்டருக்கு 3 மகன்கள் என்றால் சரிதான், அவர்கள் பெயர் ஜானகிராமன், கோவிந்தராஜ், சாமி கவுண்டர் ஆவர்.

2)மேற்படி ஜானகிராமனுக்கு 26 செண்டும், கோவிந்தராஜிக்கு 26 செண்டும், சாமிகவுண்டருக்கு 35 செண்டும் சர்வே நெம்பர் 49/1 எ-ல் பாத்தியப்பட்டது என்றால் சரிதான். கோவிந்தராஜி 26 செண்டை தன்னுடைய அண்ணனான ஜானகிராமனுக்கு 30.04.1971 ல் கிரையம் கொடுத்துவிட்டார் என்றால் சரியல்ல. மேற்படி 30.04.1971 கிரையபத்திரம் மூலம் கிடைக்கபெற்ற 26 செண்டையும், தனக்கு பாத்தியப்பட்ட 26 செண்டையும் மொத்தமாக 52 செண்டை ஜானகிராமன் அவர் உயிருடன் இருக்கும் வரை அனுபவித்துவந்தார் என்றால் சரிதான். ஜானகிராமன் கவுண்டர் 2004 ல் இறந்துவிட்டார் என்றால் சரிதான். ஜானகிராமன் கவுண்டருக்கு யார் யார் வாரிசுகள் என்றால் 1ம் பிரதிவாதி வள்ளியம்மாள் அவரது மனைவியாவார், 2ம் பிரதிவாதி கண்ணம்மாள் அவரின் மகள் ஆவார்கள்.

3)20.09.2006 ல் 3ம் பிரதிவாதி தேவராஜ் 1 மற்றும் 2 பிரதிவாதிகளிடமிருந்து மேற்படி 52 செண்டை கிரையம் பெற்றுள்ளார் என்றால் சரிதான். மேற்படி 52 செண்டிற்கு 3ம் பிரதிவாதி பட்டா எண் 227 அவர் பெயருக்கு மாற்றம் செய்துவிட்டார் என்றால் சரிதான். மேற்படி பட்டா மாற்றம் செய்தபிறகு காலசூழ்நிலைக்கு ஏற்ப பயிரிட்டு வந்தார், தற்போது பயிர் எதுவும் வைக்கவில்லை

என்றால் தற்போது வீட்டு மனையாக வைத்துள்ளார். வீட்டுமனைக்கு முன்பு பயிரிட்டு வந்தார் என்றால் சுமார் 2 வருடங்கள் பயிரிடவில்லை. 3 ம் பிரதிவாதி முறையாக 52 செண்டை கிரையம் பெற்று அனுபவித்துவருகிறார், ஆகையால் வாதிக்கு சார்பாக நான் கூறும் சாட்சி ஏற்றுகொள்ளதக்கதல்ல என்றால் சரியல்ல.

குறுக்கு விசாரணை முடிவடைந்தது.

Taken down by me in open court read over to the witness and acknowledged by him/her to be correct.

SALMA BASEER

Digitally signed by SALMA BASEER
Date: 2026.01.20 12:58:27 +0530

District Munsif,
Polur.